# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.2/2012

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 13-12-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Manova | Village | : |
| Father's Name | : Adimoolam | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>4 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வா.த,சா.2 ன் படி நான் மூன்றாவது பிரதிவாதி பிலால் அகமதுவுடன் ஒப்பந்தம் போட்டுள்ளேன். வா.த,சா.2 ல் கண்டுள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். வழக்குரையில் காணப்படும் கையொப்பங்கள் என்னுடையது தான். எனது வழக்குரையிலும் வா.த,சா2 விலும் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள எனது கையொப்பங்கள் வெவ்வேறு மாதிரி போடப்பட்டுள்ளது என்றால் அனைத்தையும் நான் தான் போட்டுள்ளேன். நான் வெவ்வேறு மாதிரி அவ்வாறு கையொப்பம் போட்டுள்ளேன் என்றும் அவ்வாறு போட்டிருப்பது பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் என்றும் சொன்னால் சரியல்ல. வா.த,சா.2 ல் கையொப்பமிட்டுள்ள சாட்சிகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அவர்களின் விலாசமும் எனக்கு தெரியும். தற்போதும் அவர்கள் அந்த விலாசத்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களில் குமார் என்பவர் இறந்துவிட்டார். 2 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தத்தில் விற்பனை தொகை இரண்டு கோடியே நாற்பது லட்சம் என குறிப்பிட்டுள்ள நிலையில், அதை பின்னிட்டு ஏற்பட்ட வா.த,சா.2 ல் கிரைய தொகை ரூ.20,00,000/- குறிப்பிடப்பட்டிருப்பதன் நோக்கம் பிரதிவாதிகளை ஏமாற்றி சொத்துக்களை அபகரிப்பது தான் என்றால் சரியல்ல. 10.02.2011 அன்று 3 ஆம் பிரதிவாதிக்கும் 4 ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அந்த ஒப்பந்தம் எழுதப்பட்ட 08.04.2011 க்கு பின்னர் தான் தெரியவந்தது. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனக்கு

மேற்கூறிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி பரிகாரம் கேட்கவில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2 வது பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. என் மீது இரண்டாம் பிரதிவாதி புகார் கொடுத்து அதன் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விசாரணை செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. என் மீது தவறில்லை என போலீசார் கூறிவிட்டார்கள். அந்த விசாரணையில் 2 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவாதி மூலம் எனக்கு ரூ.1,50,000/- கொடுத்தார் என்றும் நான் அதை பெற்றுக்கொண்டு நான் இனிமேல் தாவா சொத்தில் தலையீடு எதுவும் செய்யமாட்டேன் என்றும் அதன் பேரில் தான் விசாரணை முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, இது பொய்யான தகவல். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 2 ஆம் பிரதிவாதி 4 ஆம் பிரதிவாதி பெயரில் 5 கிரைய பத்திரங்கள் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. 3 கிரைய பத்திரங்கள் தான் ஏற்படுத்தியுள்ளார். 5 கிரைய பத்திரங்கள் ஏற்பட்டிருக்கும் நிலையில் நான் 3 கிரைய பத்திரங்கள் தான் செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளதால், நான் கேட்டிருக்கும் பிரதான பரிகாரமான நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.த,சா.2 ஐ நான் பி.த,சா.2 மூலம் மோசடியாக ஏற்படுத்தியுள்ளேன் என்றும் ஆதலால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(மற்ற சங்கதிகள் குறித்து, முதலாம் பிரதிவாதி செய்துள்ள குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக நான்காம் பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.)